செய்தி வெளியீடு எண்.23 நாள் 21,02,2020

## பத்திரிக்கை செய்தி

சென்னை மாவட்டத்தில், மார்ச்/ஏப்ரல் 2020ல் மேல்நிலை இரண்டாம் ஆண்டு, முதலாம் ஆண்டு மற்றும் இடைநிலைப்பொதுத் தேர்வுகள் நடைபெறவுள்ளன. மேல்நிலை இரண்டாம் ஆண்டுப் பொதுத் தேர்வினை 47,301 தேர்வர்களும், முதலாம் ஆண்டு பொதுத் தேர்வினை 46,778 தேர்வர்களும் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வினை 49,569 தேர்வர்களும் எழுத உள்ளனர். மேல்நிலைத் தேர்வினை 161 மையங்களிலும், பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வினை 215 மையங்களிலும் மாணவர்கள் தேர்வு எழுத உள்ளனர் .

மேற்காண் தேர்வினைச் சிறப்பான முறையில் நடத்திட மாவட்ட ஆட்சியர் தலைமையில் இன்று (21.02.2020) ஆய்வு அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் வருவாய்த் துறை, காவல் துறை, போக்குவரத்துத் துறை, மின்சார வாரியத் துறை, தீயணைப்புத் துறை, மற்றும் கல்வித் துறை சார்பில் முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் பிற உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் தேர்வுகளுக்கான அனைத்து முன்னேற்பாடுகள் மேற்கொள்ளவும், வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களுக்கு 24 மணி நேரம் ஆயுதம் தாங்கிய காவலர்கள் நியமனம் மேற்கொள்ளவும், தேர்வு மையங்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கவும், தேர்வு எழுதச் செல்லும் மாணவர்கள் குறித்த நேரத்தில் தேர்வு மையங்களுக்கு செல்ல பேருந்து வசதிகள் செய்திடவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், பொதுத் தேர்வினை எழுதும் மாணவர்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி இ.ஆ.ப., அவர்கள் தன் நல்வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

செய்தி வெளியீடு.
செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்.
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்.
சென்னை 1,